26th March 1959]

Minimum wages

* 1024 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ல் ஜூலை மாதத்தில் டில்லியில் நடந்த **Indian Labour Conference**-ல் குறைந்தபட்சக் கூலி விஷயமாக எடுத்த முடிவை சென்னை சர்க்கார் அமுல் செலுத்தினர்களா ?

(ஆ) இல்லையென்றால் எப்போது அமுலில் கொண்டுவரப்படும் ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) & (ஆ) 1957 ஜூலையில் கூடிய தொழில் மகாநாட்டில், குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்வதற்காக் ஏற்படுத்தப்படும் ஆலோசனை போர்டுகள், கமிட்டிகள் முதலியவை, பின்பற்றுவதற்காக சில கோட்பாடுகள் இயற்றப்பட்டன. அந்த கோட்பாடுகளை இந்த ராஜ்யத்தில் குறைந்த பட்சக் கூலி சிபார்சு செய்வதற்காக நியமிக்கப்படும் போர்டு, கமிட்டிகளுக்குத் தெரியப்படுத்தி அவைகளை மேற்சொன்ன கோட்பாடுகளை கருத்தில் கொண்டு தங்கள் சிபார்சுகளை சர்க்காருக்குச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், இந்தக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பது 5 வருஷங்களுக்கு ஒரு முறை என்று சொல்லிய போதிலும், 5 வருஷங்களுக்கு முன்னாலேயே ஏற்கனவே நிர்ணயம் செய்திருந்தாலும் அதிக விலை வாசி உயர்வு காரணமாக மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த சர்க்கார் ஆதரிப்பார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த மாதிரி முடிவு செய்யும்போது செய்யலாம்.

Sri K. B. S. MANI : இந்தக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிப்பதிலே விவசாயத்திற்கு தினக் கூலி நிர்ணயிப்பது தமிழ் நாட்டில் முக்கியமாக இருக்கிற காரணத்தினால், அதைக் கலந்து ஆலோசிக்க முயற்சிப்பார்களா ?

The Hon Sri R. VENKATARAMAN : இப்போது போர்டு போட்டு ஆலோசிப்பதாக இல்லை. சர்க்காரே நோட்டிபிகேஷன் மூலமாகச் செய்ய வேண்டுமென்று யோசிக்கப்பட்டு வருகிறது.

Sri N. K. PALANISAMI : May I know the steps taken by the Government to give effect to the minimum wages recently fixed for drivers and conductors employed by private fleet owners?

The Hon. Sri R. VENKATARAMAN : I do not understand the question about the steps taken by the Government. If any breaches or violations are brought to the notice of the Government, they will enforce it.

P.W.D. Tank in Semmedu village, Gingee taluk

* 1025 *Q.*—Sri S. M. ANNAMALAI (on behalf of Sri K. GOPALA KOUNDER) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

செஞ்சி தாலுக்காவில் செம்மேடு கிராமத்திலுள்ள (**Public works Department**) ஏரிக் கரையை வட புறம் நீட்டி ஆயக்கட்டை அதிகப்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes, Sir.